ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT



எனது இலக்கம்: PS/PCA/11/PMT/5 சுற்றிக்கை இல.: PS/PCA/Circular/3/2022

2022 ஒக்டோபர் 28 ஆம் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
இராஜாங்க அமைச்சுக்களின் விடயங்களுக்குப் பொறுப்பான மேலதிகசெயலாளர்களுக்கும்.

2023 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவுசெலவு) மீதான விவாதம்

2023 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட ஆவணம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதனால், நிதி அமைச்சு, குறிப்பிட்ட அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள் அரச நிறுவனங்கள் தனியார் துறையினர், வெளிநாட்டு தூதரக சேவைகள் மற்றும் சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனங்கள் என்பவற்றுடன் தொழில்நுட்பரீதியிலான மதிப்பீடுகளை மேற்கொண்டு வருவதுடன், வரவுசெலவுத்திட்டத்திற்கான விசேட முன்மொழிவுகளை இனங்காணும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதனால், இதற்காக அனைத்து அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் குறிப்பிட்ட அலுவலர்களின் நேரடிப் பங்களிப்பு நிதி அமைச்சுக்கு வழங்கப்பட்டதல்வேண்டுமென்று மேன்மைதங்கிய சனாதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி, இது தொடர்பாக தங்களின் அமைச்சு மற்றும் கௌரவ அமைச்சரின் முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் என்பவை இதுவரை நிதி அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்காதுவிடின் அவற்றைத் துரிதமாக வழங்குமாறு முதலில் அறிவுத்துக்கொள்ள விரும்புகின்றேன்.

02.மேலும், பாராளுமன்ற அலுவல்கள் செயற்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ள வரவுசெலவுத்திட்ட நேர அட்டவணைக்கமைவாக 2022 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி பி.ப 1.30 மணியளவில் சனாதிபதியினால் நிதி அமைச்சர் என்ற வகையில் வரவுசெலவுத்திட்ட உரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. வரவுசெலவுத்திட்ட விவாதம் மீதான இரண்டாம் முறை வாசிப்பு 2022 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி செய்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது.வரவுசெலவுத்திட்ட இரண்டாம் முறை வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 2022 நவம்பர் மாதம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. வரவுசெலவுத்திட்டம் மீதான குழு நிலை விவாதம் 2022 நவம்பர் மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 2022 டிசெம்பர் மாதம் 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன், நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான மூன்றாம்மூறை வாக்கெடுப்பு 2022 டிசெம்பர் மாதம் 08 ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. வரவுசெலவுத்திட்ட விவாதம் தொடர்பான நிகழ்ச்சிநிரலின் பிரதியொன்று தங்களின் தகவல்களுக்காக இத்தால் இணைக்கப்பட்டுள்ளது.

03. இக்கால எல்லைக்குள் கௌரவ அமைச்சர்கள் உத்தியோகபூர்வ அல்லது தனிப்பட்ட வெளிநாட்டு சுற்றுலாக்களை ஏற்பாடு செய்யக்கூடாதென்பதுடன், விசேட சந்தர்ப்பங்களின்போது வெளி விவகார அமைச்சின் மூலம் வெளிநாடுகளிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகங்களுக்கும் மற்றும் தூதரகங்களினுடாக குறிப்பிட்ட முன்மொழிவு யோசனைகளை வழங்க முடியுமென்றும் மேலதிகமாக குறிப்பிட விரும்புகின்றேன்.

04. ஆகவே, அத்தியாவசிய நடவடிக்கைக்கள் தவிர்ந்த வேறு வெளிநாட்டுச் சுற்றுலாக்களில் இக்கால எல்லைக்குள் கலர்ந்துகொள்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கௌரவ அமைச்சர்கள் மற்றும் சிரேஷ்ட அலுவலர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்/ ஈ எம் எஸ் பீ ஏகநாயக்க
சனாதிபதி செயலாளர்

பிரதிகள் -
1. பிரதமரின் செயலாளர்
2. அமைச்சரவையின் செயலாளர்
3. பாராளுமன்ற அவைத் தலைவரின் செயலாளர்
4. பாராளுமன்ற ஆளுங்கட்சி பிரதம கொறாடாவின் செயலாளர்

} தகவலுக்காக

ගාලු මුවදොර, කොළඹ 01 / காலி முகத்திடல், கொழும்பு 01 / Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk

# <u>வரவுசெலவுத் திட்ட விவாவதத்திற்கான நிகழ்ச்சித்திட்டம் – 2023</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2022 | நவம்பர் | 14 | திங்கட்கிழமை | பி.ப1.30 | வரவுசெலவுத்திட்ட உரை (ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான இரண்டாவது வாசிப்பு) |

<u>இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதம்</u>

| | | | |
|---|---|---|---|
| 2022 | நவம்பர் | செவ்வாய் | 15 |
| | | புதன் | 16 |
| | | வியாழன் | 17 |
| | | வெள்ளி | 18 |
| | | சனி | 19 |
| | | திங்கள் | 21 |
| | | செவ்வாய் | 22 |

ஒதுக்கப்பட்டுள்ள நாட்களின் எண்.-ஏழு (07)

<u>விவாதக் காலப்பகுதி</u>

(மு.ப 9.30 முதல் பி.ப 5.30 வரை)

<u>சபை ஒத்திவைப்பின் போதான பிரேரணை நேரம்</u>

(பி.ப 5.30 முதல் பி.ப 6.00 வரை)

*(நவம்பர் 22 செவ்வாய்க்கிழமை தவிர்ந்த)*

*(வாய்மூல விடைகளுக்கான வினாக்கள் மற்றும்*
*ஒத்திவைப்பு காலத்திற்கான வினாக்கள்)*
*(மதிய போசனத்துக்கான இடைவேளை ஒதுக்கப்படவிலை)*

<u>இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு 2022 நவம்பர் 22 ஆம் ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு இடம்பெறும்</u>

<u>குழுநிலை விவாதம்</u>

| | | | |
|---|---|---|---|
| 2022 | நவம்பர் | புதன் | 23 |
| | | வியாழன் | 24 |
| | | வெள்ளி | 25 |
| | | சனி | 26 |
| | | திங்கள் | 28 |
| | | செவ்வாய் | 29 |
| | | புதன் | 30 |
| 2022 | டிசெம்பர் | வியாழன் | 01 |
| | | வெள்ளி | 02 |
| | | சனி | 03 |
| | | திங்கள் | 05 |
| | | செவ்வாய் | 06 |
| | | வியாழன் | 08 |

ஒதுக்கப்பட்டுள்ள நாட்களின் எண்.- பதின்மூன்று (13)

<u>விவாதக் காலப்பகுதி</u>

(மு.ப 9.30 முதல் பி.ப 5.30 வரை)

<u>சபை ஒத்திவைப்பின் போதான பிரேரணை நேரம்</u>

(மு.ப 5.30 முதல் 6.00 வரை)

*(டிசெம்பர் 08 வியாழக்கிழமை தவிர்ந்த)*

*(வாய்மூல விடைகளுக்கான வினாக்கள் மற்றும்*
*ஒத்திவைப்பு காலத்திற்கான வினாக்கள்)*
*(மதிய போசனத்துக்கான இடைவேளை ஒதுக்கப்படவிலை)*

<u>மூன்றாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு 2022 டிசெம்பர் 08 ஆம் ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு இடம்பெறும்</u>

அரசாங்க பிரதம கொறாடாவின் செயலாளர் அலுவலம்
இலங்கை பாராளிமன்றம்,ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை

2022 ஒக்டோபர் 27 ஆம் திகதி